சார்ந்த விவசாயி. அவர்கள் குறிப்பிட்டதுபோல் சிறு விவசாயி அல்ல. 2.5 ஏக்கருக்கு மேலாக அவருக்கு நஞ்சைநிலம் இருக்கிறது. என்ற காரணத்தினாலும், அவருக்குப் போதிய வசதி இருக்கின்ற காரணத்தினாலும் அந்தச் சட்டப்பூர்வமான நடவடிக்கைஎடுக்கப் பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

அதே நேரத்தில் அவர்கள் சொன்னதுபோல் அந்தப் பகுதியில் விளாகம் கிராமப் பகுதியில் இதுவரை ஏறத்தாழ 505 உறுப் பினர்கள் தவணை தவறிய கடன் பாக்கிதாரர்களாக இருக் கிறார்கள் என்றாலும் கூடஅவர்களிலே யார்யாரால் கொடுக்க முடியுமோ யார் யார் அதிக அளவிற்கு கடன்களைப் பாக்கி வைத் திருக்கிறார்களோ அவர்கள் மீது சட்டம் அனுமதிக்கப்பட்ட வகையில், சட்டத்தில் விதிக்கப்பட்ட விதிமுறைகளின்படி மிக்க விழிப்பாக இருந்து, சிறிய விவசாயிகளுக்கு எந்தப்பாதகமும் ஏற்படாத வகையில் மிக்க எச்சரிக்கையோடு இருக்க வேண்டு மென்று அதிகாரிகளுக்குக் கடுமையாக உத்தரவிட்டு அந்தக் காரி யங்கள் நடைபெற்று வருகின்றன. அப்படியும் ஏதாவது அத்து மீறல்கள் இருக்குமானால் அரசினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வரப்படுமேயானால் உரிய நடவடிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு எடுக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சங்கத்திலே கடனே வாங்காத திருமதி வேம்பு அம்மாள் அவர்களின் வீட்டிலே ஜப்தி செய்யப்பட்டிருப்பதுபற்றி மாண் மிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மனுக்கள் மூலமாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுத்து, ஜப்தி செய்த சாமான்களை உடனடியாகத் திருப்பிக் கொடுக்க அரசு உத்தர விடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் இப்போது என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்க ளுடைய அந்த விவரங்களை மனத்திலே வைத்துக் கொண்டு அதனை விசாரித்துப் பார்த்து அப்படி ஏதாவது நடைபெற்றிருந் தால் உரிய நடவடிக்கை எடுக்க தமிழக அரசு ஆவன செய்யும்.

(5) புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்கள் கடத்தப் பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து கவன ஈர்ப்புத் தீர்மானம் 5. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இருக்கையில் இல்லை. அமைச்சரின் அறிக்கை அவைமுன் வைக்கப்பெற்றுள்ளது.

அறிக்கை

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் கூறியுள்ள இடத்திலிருந்து மரங்களை கடத்திச் சென்ற 6 லாரிகளை 30-9-1979 அன்று கொடைக்கானல் தாசில்தார் ஜப்தி செய்து அவர்களின் மீது வன இலாகா சட்டத்தின்படி வழக்குப் பதிவு செய்துள்ளார். அந்த லாரிகள் கடத்திச் செல்லப்பட்ட மரங்களின் தோராய மதிப்பு ரூ. 31,000 ஆகும். கடந்த ஜனவரியிலிருந்து இதுவரை இதுபோன்ற திருட்டுத்தனமாக மரங்களை வெட்டிச் செல்பவர்கள் மீது 24 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருந்து வருகின்றது. இவற்றினைத் தடுக்க மாவட்ட ஆட்சியர் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார். தற்போது உறுப்பினர் கூறுவது போல எந்தவிதமான நெருக்கடியான நிலையும் நிலவவில்லை என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். ஆகவே இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் தேவையில்லை.

(6) தமிழகத்திலிருந்து அரிசி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் என்கிற அறிவிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்புத் தீர்மானம் 6 திருவாளர்கள் ரா. உமாநாத், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், எம். அண்ணாமலை, நா. பழனிவேல் ஆகியோர் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அவசரப் பொதுமுக்கியத் துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே,

''தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யப்படும் என தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்ததினால், அரிசி விலையேற்றம் ஏற்படும் என மக்கள் மத்தியில் நிலவும் பதட்ட நிலை குறித்த''. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப் பட்டிருக்கிறது.

அறிக்கை.

மத்திய அரசு, மாநில அரசுகள் கையிருப்பில் ஏராளமான அரிசி இருந்த நிலைமையை மனதிற்கொண்டு, குறிப்பிட்ட அளவு அரிசியை ஏற்றுமதி செய்ய அனுமதி அளிப்பதென்று மத்திய